11.03.2025

அசல் வழக்கு எண்: 206/2010

வா.சா.1 சாட்சி செந்தில் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்தை காட்டகூடிய மாதிரி வரைபடத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**மாதிரி வரைபடம் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்குரிய கிஸ்தி ரசீதை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**17.03.2010ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

மதுரை தாலுகா நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.18/1925ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**அசல் வழக்கு எண். 18/1925ன் வழக்கின் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 3 ஆகவும், தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறன.**)

திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.375/1937 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**அசல் வழக்கு எண். 375/1937ன் வழக்கின் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 5 ஆகவும், தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறன.**)

தாவா சொத்திற்குரிய கிஸ்தி ரசீதுகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**19.02.1994ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது வா.சா.ஆ.**

**7ஆகவும், 07.03.1998ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது வா.சா.ஆ. 8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**நீதிமன்ற ஆணையரின் அறிக்கை நீ.ம.சா.ஆ. 1 ஆகவும், நீதிமன்ற ஆணையரின் வரைபடம் நீ.ம.சா.ஆ. 2 ஆகவும், குறுவட்ட அளவரின் வரைபடம் நீ.ம.சா.ஆ. 3ஆகவும் குறியீடு செய்யப்படுகிறன.**)

(வா.சா. 1 குறுக்கு விசாரணைக்காக இந்த வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)